

சேலம், தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் நேற்று முன்தினம் (10.12.2025) நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் 28 மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா ஆணையை கைத்தறி மற்றும் துணி நூல் துறை, அமைச்சர் மாவட்டக் கழக செயலாளர் ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, மாற்றுத் திறனாளிகள்நல அலுவலர் வசந்த ராம்குமார், நகராட்சி தலைவர்கள் சுஜாதாவினோத், ஹரிணிதில்லை, தேவி, ஒன்றிய குழு தலைவர்கள் நெமிலி பி.வடிவேலு, புவனேஸ்வரி சத்தியநாதன், நிர்மலா சௌந்தர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சேலம் மாவட்டத்தில்

# மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.199.12 கோடியில் நலத்திட்டங்கள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!



சேலம், டிச.12-

தமிழ்நாட்டிலேயே சேலம் மாவட்டத்தில் தான் அதிக எண்ணிக்கையில் பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது என்றும் கடந்த 4 1/2 ஆண்டுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கென சேலம் மாவட்டத்தில் மட்டும் ரூ.199.12 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் 143 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழா சேலம், தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் மீது அக்கறையோடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி தந்திருக்கிறார்கள். அதேபோன்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையினை தனது நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் வைத்து அவர்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருகிறார்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாத்து, சமுதாயத்துடன் இணைந்து வாழ மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் நாள் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் கடைப் பிடிக்கப்படுகிறது. அந்த வகையில் "தடைகளை தகர்ப்போம் அனைவரையும் உள்ளடக்கிய சமுதாய வளர்ச்சி பாதை அமைப்போம்" என்ற இலட்சிய நோக்குடன் இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நடைபெற்று வருகிறது. மாற்றுத்திறனாளிகள் நலன் காப்பதில் முன்மாதிரி அரசாக தமிழ்நாடு அரசு உள்ளது. இந்தியாவிலேயே முதன் முதலாக மாற்றத்திறனாளிகளை உள்ளாட்சிகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் சேலம் மாவட்டத்தில் 15,264 நபர்கள் மாதம் ரூ.2000 ஓய்வூதியமாக பெற்று பயனடைந்து வருகின்றனர். குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் இது வரை 83,645 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. சுய தொழில் புரிய ஆர்வமுள்ள 18 வயது முதல் 45 வயது வரை உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 75,000 வங்கிக் கடன் ரூ.25,000 மானியத்துடன் வழங்கப்படுகிறது.

மேலும், கல்வி உதவித் தொகை, பட்டப்படிப்பு உதவித் தொகை, திருமண நிதி உதவி மற்றும் 8கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. அரசு பேருந்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான 75% இலவச பேருந்து கட்டண சலுகையும், கல்வி நிறுவனங்களில் 5% இட ஒதுக்கீடும், அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் 4 % இட ஒதுக்கீடும் வழங்கப்படுகிறது. மூன்று சக்கர வாகனம் பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி, பார்வை குறைபாடு உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு கருப்பு கண்ணாடிகள், காதொலிக் கருவிகள். கால் தாங்கிகள் ஊன்றுகோள்கள் என உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து 5 லட்சம் வரை முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டமும், தமிழ்நாட்டிலேயே சேலம் மாவட்டத்தில் தான் அதிக எண்ணிக்கை பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 4% ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் 2,05,491 பயனாளிகளுக்கு ரூ.199.12 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெற்று வரும் இவ்விழாவின் மூலம் இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரியால் இயங்கும் சிறப்பு வகை சக்கர நாற்காலி, பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி, மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம் என மொத்தம் 143 மாற்றுத் திறனாளி களுக்கு ரூ.1 கோடியே 43 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய நலத்திட்ட உதவிகளைப் பெற்றுள்ள பயனாளிகள் இதை பயன்படுத்தி தங்கள் வாழ்வில் மென்மேலும் முன்னேற்றம் அடைய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

இதனைத்தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தின விழாவையொட்டி மாற்றுத்திறனாளிகளுக்கென மாவட்ட அளவில் நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஓவியப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களும், மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பாக சேவை புரிந்து வரும் சிறப்பு பள்ளிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களைப் பாராட்டி நினைவு பரிசுகளை வழங்கினார்கள்.


முன்னதாக சென்னையில் 03.12.2025 அன்று நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் சிறப்பான ஓவியத்திற்கான முதல் பரிசு பெற்று முதலமைச்சர் அவர்களிடம் ரூ.10,000த்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை பெற்ற மாணவர்கள் அமைச்சர் இரா.இராஜேந்திரனிடம் வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி, மாற்றுத்திறனாளிகள் நல சங்கத் தலைவர் அத்தியண்ணா உள்ளிட்ட தன்னார்வலர்கள், மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

### நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க

# எரிசக்தி உற்பத்தியைக் கூட்ட - ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி,டிச.12 -

தருமபுரி எம்.பி.ஆ.மணி மக்களவையில் கேள்வி வருமாறு:

இந்தியா முழுவதும் 2030 ஆம் ஆண்டுக்குள் 500 GW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை அடைய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தி திறன் கூட்டலின் தற்போதைய நிலை என்ன?

நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு (RE) கடன் உறுதிமொழிகளை அதிகரிக்க ஒன்றிய அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடனும்,நிதி நிறுவனங்களுடனும் இணைந்து ஏதேனும் திட்டங்களை வழங்கி உள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்ட் பிஜிலி யோஜனாவின் கீழ் 7 % வட்டியில் அடமானம் இல்லாத கடன் (PM-SBMGY)

3 KW வரை கூரை சூரிய மின் நிறுவல் உள்ளிட்ட திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள குடும்பங்கள் பயன் அடைந்துள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டம் உட்பட IREDA, REC,PFC மற்றும் பொதுத் துறை வங்கிகள் மூலம் RE கடன்கள் வழங்கப்பட்டுள்ளதா? வழங்கப்பட்டிருந்தால் அதன் எண்ணிக்கை மற்றும் மதிப்பு என்ன? என்று புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை இணைய மைச்சர் ஸ்ரீபாத் யோசோ நாயக்கிடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ. மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், வடக்கு ஒன்றியம், பால்நாங்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் ஏ.சி.சுரேஷ்குமார், ஒன்றிய கவுன்சிலர் சந்திரசேகர், சிவா, சாதிக்பாட்சா, வீரமணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி

# மங்களூரில் தனியார் துறை மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்!

## அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!



கடலூர், டிச. 12-

கடலூர் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் மங்களூரில் நடைபெறுவதை யொட்டி அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை கீழ் வருமாறு:

கழக தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் (சி.வி.கணேசன்) எனது தலைமையில் திட்டக்குடி சட்டமன்ற தொகுதியில் கடலூர் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தொழில் நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் 200-க்கும் மேற்பட்ட முன்னனி தனியார் துறை நிறுவனங்கள் பங்கேற்கும் கல்வி தகுதிகள் பள்ளி படிப்பு முதல் பட்டப் படிப்பு, I.T.I, டிப்ளமோ, நர்சிங், மற்றும் பொறியியல் படிப்பு முடித்த மாணவ மாணவியர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை (13.12.2025-சனிக்கிழமை) காலை : 9 மணி முதல் மதியம் : 3.00 மணிவரை மங்களூர் அரசு மேல் நிலைப் பள்ளியில் நடைபெறுகிறது.

சிறப்பு அம்சங்கள்:

★40,000த்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்கள்

★ தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அன்றே பணி நியமன ஆணைகள்

★ அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்திற்கான பதிவு வழிகாட்டுதல்கள்

★ இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான பதிவுகள் விருப்பம் உள்ளவர்கள் பாஸ் போர்ட் அளவு புகைப் படம், கல்விச் சான்றிதழ்கள், ஆதார் அட்டை மற்றும் சுயவிவரக்குறிப்பு (Bio Data) ஆகியவற்றுடன் நேரில் கலந்து கொள்ளலாம்.

இவ்வாறு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை நடத்தும் –

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம்!

## தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை!

சென்னை, டிச. 12-

தி.மு.க. கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் திராவிட இளந்தென்றல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம் நாளை (13.12.2025 - சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் கோவை, சிங்கா நல்லூர் ஸ்ரீ சாய் (விவாகா) திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

காலை 9 மணிக்கு பறை இசை முழக்கமும், கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் அவர்களின் இயக்கப் பாடல்களும், புதுகை பூபாலம் குழுவினரின் கலை நிகழ்ச்சியும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து பேரவை மாநில துணைச் செயலாளர் திருமதி மீனா ஜெயக்குமார் தலைமையில் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் தொடக்க உரையாற்றுவார்கள். கழகத் துணைப் பொதுச் செயலாளர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள். கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் மேனாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி நலத்திட்ட உதவிகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றுவார்கள்.

தொடர்ந்து மாவட்ட திமுக பொறுப்பாளர்கள் துரை செந்தமிழ்ச் செல்வன், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், பாராளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ப. ராஜ் குமார், கே. ஈஸ்வரசாமி, பேரவை மாநில நிர்வாகிகள் எம். ஆர். ஆர். வாசுவிக்ரம் வண்ணை அரங்கநாதன், தில்லைசெல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் கருத்தரங்கில் திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன் அவர்கள் "யாரால்! யாரால்!! யாரால்!!!" என்ற தலைப்பிலும், மூத்த ஊடகவியலாளர் "தமிழ்க்கேள்வி செந்தில்வேல்" திராவிடம் 2.0 ஏன்? எதற்கு? என்ற தலைப்பிலும், பேரவை துணைத் தலைவர் போஸ் வெங்கட் "ஒரு கல் ஒரு தலைமை" என்ற தலைப்பிலும், பேரவைச் செயலாளர் பொள்ளாச்சி மா. உமாபதி "சனாதனச் சத்ரு" என்ற தலைப்பிலும் கருத்துரை நிகழ்த்த உள்ளார்கள்.

பேரவை மாவட்ட அமைப்பாளர் துரை கதிரவன் வரவேற்புரையாற்றுவார், எஸ்.எம்.எஸ். சுதாகரன் நன்றியுரை ஆற்றுவார்.

பிற்பகல் 2 மணி அளவில் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் (எனது) கூட்டம் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர்) தலைமையில் நடை பெறுகிறது.

பேரவைத் துணைச் செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், எழில்மாறன், செல்வேந்திரன், கே. வி. குப்பம், சி. கோபி, கலைமாமணி ஜாகிர் உசேன், எம் எஸ். ஹரிபாபு, என். எஸ். மாதேஸ்வரன் ஆகியோர் மாநில நிர்வாகிகளுடன் இணைந்து கருத்தரங்கப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

கழக உடன்பிறப்புகள் அனைவரும் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

### முரசொலி முதுநிலை

# பிழைதிருத்துநர் ஜெ.டி.அரசு மறைவு!

**கழகத்தினர் அஞ்சலி!**



சென்னை, டிச.12-

முரசொலி நாளிதழில் ஆசிரியர் பிரிவில் முதுநிலை பிழைதிருத்துநராக பணி புரிந்து வந்த ஜெ.டி. அரசு அவர்கள்உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் (10. 12.2025) இரவு 10.30 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது இல்லம் பெருங்களத்தூரில் 7/12, ராமதாஸ் தெருவில் உள்ளது.

முரசொலி நாளிதழில் 01.04.1980 ஆம் ஆண்டு முதல் பிழைதிருத்துநர் பிரிவில் 40 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற பிறகும் தொடர்ந்து ஆசிரியர் பிரிவில் முதுநிலை பிழைதிருத்துநராக பணியாற்றி வந்தார்.

21.12.2021 அன்று திடீரென மூளையில் ஏற்பட்ட ரத்தக் கசிவால் உடல்நலக் குறைவு ஏற்பட்டு கைகால் செயலிழந்து சிகிச்சை பெற்று வந்தார் ஜெ.டி. அரசு அவர்கள்.

இவருடைய தந்தை சி.என்.ஜெயவேல் அவர்கள் முரசொலி நாளிதழில் 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழகத்தினர், முரசொலி அலுவலர்கள் அஞ்சலி செலுத்தினர்.




கரூரில் கடந்த மாதம் பள்ளி கல்வித்துறை சார்பில் பசுமையும் பாரம்பரியமும் என்ற மையக்கருத்தில் 3ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கான கலைத் திருவிழாவில் நாட்டுப்புற நடனம் என்ற பிரிவில் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம் மந்திக்குளம் ஊராட்சி, மீனாட்சிபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியைச் சேர்ந்த மாணவ–மாணவிகள் தூத்துக்குடி மாவட்ட அளவில் முதலிடமும், மாநில அளவில் இரண்டாவது இடமும் அடைந்ததைத் தொடர்ந்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயனிடம் வாழ்த்துப் பெற்றார்கள்.உடன் பள்ளி தலைமை ஆசிரியை கிருஷ்ணகுமாரி, உதவி தலைமையாசிரியை மலர்விழி விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, பாக முகவர் முத்துப்பாண்டி உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.